[2015 *மார்ச்* 31

104—

நூலகம்

*32381—**திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேடகட்டமடுவு ஊராட்சி, முல்லைவனம் கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட வேடகட்டமடுவு ஊராட்சி, முல்லைவனம் கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறப்பதற்குரிய நிபந்தனைகளை நிறைவேற்றித் தருமாறு அவ்வூராட்சி மன்றத் தலைவருக்கு தருமபுரி மாவட்ட நூலக அலுவலர் அவர்களால் 1-7-2013 அன்று கடிதம் எழுதப்பட்டது. மேலும், 10-2-2014 அன்று நினைவூட்டுக் கடிதமும் அனுப்பப்பட்டது. அவ்வூராட்சி மன்றத் தலைவரிடமிருந்து இதுநாள்வரை பதில் பெறப்படவில்லை. உரிய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட முல்லைவனம் கிராமத்தில் பகுதிநேர நூலகம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, வேடகட்டமடுவு ஊராட்சி,*

2015 மார்ச் 31]

16 கிராமங்களை உள்ளடக்கியதாகும். அம்மாபேட்டை, ஆண்டியூர், ஆலம்பாடி, கருங்கல்பாடி, முண்டுக்குழி, முல்லைவனம் போன்ற பல கிராமங்கள் உள்ளன. இந்தக் கிராமங்களிலே 2 உயர்நிலைப் பள்ளிகள், 4 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 2 நடுநிலைப் பள்ளிகள் உள்ளன. இத்தனை கிராமங்களுக்கும் சேர்த்து ஒரே ஒரு பகுதிநேர நூலகம் மட்டும்தான் செயல்பட்டு வருகின்றது. இந்த ஊராட்சியில் சுமார் 10,000 மக்கள் வசித்து வருகின்றார்கள். அங்கிருக்கக்கூடிய படித்த இளைஞர்கள், அறிவுசார்ந்த பல்வேறு விஷயங்களில் பொது அறிவைப் பெறுவதற்கு ஏதுவாக அந்தப் பஞ்சாயத்தில் கூடுதலாக ஒரு பகுதிநேர கிளை நூலகம் தொடங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துத் தலைவருடைய ஒப்புதலோடு, மாவட்ட நிருவாகத்தினுடைய பரிந்துரையைப் பெற்று, அந்த நூலகம் திறக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். நாடு விடுதலை அடைந்து 68 ஆண்டுகள் ஆகின்றன என்று சொன்னால், பல்வேறுபட்ட அரசியல் மாற்றங்களினாலே, ஒரு ஊராட்சியில் ஒரு நூலகத்தைக் கொண்டு வருவதற்கு 50 ஆண்டுக் காலம் ஆகியிருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை ஓர் அத்தியாவசிய, அவசரத் தேவையாகக் கருதி, முல்லைவனம் கிராமத்திலே உடனடியாக பகுதிநேர நூலகம் தொடங்குவதற்கு முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக நூலகங்களும், பகுதிநேர நூலகங்களும் திறப்பதற்கு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. முல்லைவனம் கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறப்பது குறித்து சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவரிடம் பல முறை கருத்துரு கேட்கப்பட்டும், இதுவரை அவரிடமிருந்து பதில் வரப் பெறவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இதிலே நேரடியாகத் தலையிட்டு, புதியதாக நூலகம் திறப்பதற்குத் தேவையான பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அதாவது, புதியதாக நூலகம்

[2015 மார்ச் 31

திறப்பதற்கு வாடகையில்லாத இலவசக் கட்டடம் தேவை; சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 சென்ட் நிலம் தானமாகப் பெற்றுத் தரவேண்டும்; தலா ஆயிரம் ரூபாய் வீதம் நன்கொடை செலுத்தி இரண்டு பேர் புரவலராக இருக்க வேண்டும்; நூலக உறுப்பினர் சந்தா மற்றும் காப்புத் தொகையாக ரூ.30 செலுத்தி, 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்; சுமார் ரூ.2,000 மதிப்புள்ள மேசை, நாற்காலி போன்ற தளவாடச் சாமான்களெல்லாம் வழங்கப்பட வேண்டும். இவற்றையெல்லாம் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அங்கே உடனடியாக பகுதிநேர நூலகம் திறப்பதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதியிலே அரூர், கம்பைநல்லூர் மற்றும் மொரப்பூர் ஆகிய ஊர்களில் கிளை நூலகங்களும், சின்னாங்குப்பம், நவலை, கட்டரசன்பட்டி, மறதிப்பட்டி, பொய்யாம்பட்டி, எச்.தொட்டம்பட்டி, எஸ்.பட்டி, நாசன்கொட்டாய், எம்.பள்ளப்பட்டி, பெ.தாதம்பட்டி, கே.அக்ரஹாரம் மற்றும் அரூர், அம்பேத்கர் நகர் ஆகிய ஊர்களில் ஊர்ப்புற நூலகங்களும், நவலையில் பகுதிநேர நூலகங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற முல்லைவனம் பகுதியிலே சட்ட விதிகளுக்குட்பட்டு, நிபந்தனைகளையெல்லாம் பூர்த்தி செய்யும்பொழுது, பகுதிநேர நூலகத்தினை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கல்வியறிவு, மனிதவளம் போன்றவற்றில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் தருமபுரி மாவட்டம். அம்மாவட்டத்தில் எழுத்தறிவு பெற்றவர்கள் 64.5 சதவீதம் பேர். குறிப்பாக, அங்குள்ள பழங்குடி மக்களில் 42.2 சதவீதம் பேர் எழுத்தறிவு

2015 மார்ச் 31]

பெற்றவர்கள். இப்படிப்பட்ட மாவட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 2011-2012 ஆம் ஆண்டு, ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு வருவாய்க் கோட்டத்திற்கு ஒரு நூலகம் அமைப்பதாக அறிவிக்கப்பட்டது. எனது அரூர் தொகுதியிலே அதற்கான இடத்தைத் தேர்வு செய்யும் பணி அநேகமாக முடிந்திருக்கும் என்று கருதுகிறேன். ஒரு வருவாய்க் கோட்டத்திற்கு ஒரு நூலகம் அமைக்கும்பட்சத்தில், அந்தப் பகுதியிலுள்ள மக்களின் கல்வி ஆற்றல் மற்றும் பல்வேறுபட்ட அறிவுத் திறனை மேலும் வளர்ப்பதற்கு ஏதுவாக இது அமையும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 77 வருவாய்க் கோட்டங்களுக்கு அறிவித்திருக்கக்கூடிய வருவாய்க் கோட்ட நூலகங்கள், District Revenue Libraries என்னுடைய அரூர் தொகுதியில் எப்போது கட்டப்படும்? தமிழகம் முழுவதும் எத்தனை வருவாய்க் கோட்ட நூலகங்கள் கட்டப்பட்டுள்ளன? அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா?

அதேபோல், வேடகட்டமடுவு ஊராட்சி, அம்மாபேட்டை கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அங்குள்ள 300 குடும்பங்களில் ஏறத்தாழ 3,000 முதல் 4,000 வரை மக்கள் வசிக்கிறார்கள். எனவே, அந்தக் கிராமத்திற்கும் ஒரு புதிய பகுதிநேர நூலகத்தைத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

(முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2013-2014 ஆம் ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், 96 பகுதிநேர நூலகங்கள் ஊர்ப்புற நூலகங்களாகவும், 160 ஊர்ப்புற நூலகங்கள் கிளை நூலகங்களாகவும் தரம் உயர்த்தப்பட்டன. பொது நூலகங்களின்கீழ் செயல்படும் 32 மாவட்ட மைய நூலகங்கள் இரவல் பிரிவு, பத்திரிகைப் பிரிவு, குழந்தைகள் பிரிவு, இணையவலைப் பிரிவு, குடிமைப் பிரிவு, குறிப்பு உதவிப் பிரிவு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான தனிப் பிரிவுகளுடன் செயல்பட்டு வருகின்றன.

[2015 மார்ச் 31

அடுத்தகட்டமாக, மாநிலத்திலுள்ள அனைத்து முழுநேர நூலகங்களையும், நூலகக் கட்டட வசதி மற்றும் நூலக நிதி வசதியைப் பொறுத்து, மேற்சொன்ன வசதிகளுடன் மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் தனது சொந்தத் தொகுதியிலே உள்ள கிராமங்களில் நூலகங்கள் அமைக்க வேண்டியதன் அவசியத்தை இங்கே சுட்டிக்காட்டி இருக்கின்றார். அவற்றை ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையிலே, அந்தப் பகுதியிலே கிளை நூலகங்கள் அல்லது பகுதிநேர நூலகங்கள் அமைப்பதற்குத் தேவையான ஆய்வினை மேற்கொண்டு, தேவையின் அடிப்படையில் உறுப்பினரின் கோரிக்கை பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

105—

புதிய கட்டடம்

***279—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, டி.புதுப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் ஒன்றியம், டி.புதுப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திலே,